


# புதிய சின்னத்துடன் புதுப்பொலிவு காண்கிறது மெக்னம்

**(தா.சரளா தேவி)**
**கோலாலம்பூர், ஜன.10**

**நாட்டின் முன்னணி நான்கு இலக்க விற்பனை நிறுவனமான மெக்னம் கார்பரேஷன் தனது பொன் விழாவை யொட்டி புதிய சின்னத்தை அறிமுகப்படுத்தியதோடு நாடு முழுமையும் தனது கடைகளை மேம்படுத்தும் பணியிலும் ஈடுபடவிருக்கிறது.**

இந்நாட்டில் நான்கு இலக்க விற்பனையை மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்ட முதலாவது தனியார் நிறுவனம் மெக்னம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தின் பொன் விழா தலைநகரில் பிரபல தங்கும் விடுதியில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் வர்த்தக பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

கடந்த 1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் மெக்னம் உள்ளூர் மற்றும் அனைத்துலக அரங்கில் நான்கு இலக்க துறையில் தனி முத்திரை பதித்துள்ளது.

இதன் அடுத்த மைல் கல்லாக நான்கு இலக்க விற்பனை கணினிமயமாக்கப்பட்டது. இதன் மூலம் நியாயமான மற்றும் நீடித்த சேவையை உறுதிப்படுத்துகிறது.

இதனைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு உலகிலேயே முதலாவது 4 ஜேக்போட்டை அறிமுகம் செய்ததன் வழி மற்றொரு சாதனையைப் படைத்தது.

இது மலேசியாவில் இரண்டாவது பிரபல பந்தயமாக மாறியது. 4 ஜேக்போட் வழங்கிய மகத்தான வெற்றியையடுத்து 2014 ஆம் ஆண்டில் 4 ஜேக்போட் கோல்ட் மற்றும் 2016 ஆம் ஆண்டில் மெக்னம் 4 பவர்போல் முதலானவற்றை வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தியது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்நிறுவனத்திற்கு பேராதரவு நல்கி வரும் வாடிக்கையாளர்கள், முகவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு மெக்னம் தலைமை நிர்வாக அதிகாரி டத்தோ லோரன்ஸ் லிம் சுவி லின் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இதைத் தவிர்த்து, இந்நிறுவனத்தின் இலக்கு வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதற்குப் பாடுபட்ட இதன் பணியாளர்களையும் அவர் பாராட்டத் தவறவில்லை.

அடுத்த இலக்காக இந்நிறுவனத்தின் புதிய சின்னத்திற்கு ஏற்ப நாடு முழுமையும் உள்ள கடைகளை மாற்றியமைத்து புதுப் பொலிவைத் தருவதாகும் என்றார் அவர்.

டிக்கெட் வாங்குவதற்கு மட்டுமின்றி, வாடிக்கையாளர்கள் வெற்றி பெற்ற கடந்த கால எண்கள் பட்டியலைப் பார்வையிடுவதற்கும் கடைகள் சற்று விரிவாக்கம் காண்பது அவசியம். இத்தகு அணுகுமுறை அதிகமான வாடிக்கையாளர்களைக் கவரும் என்பது திண்ணம்.

அதே வேளையில், இளைஞர்களைக் கவர நவீன தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படுவது இன்றியமையாதது என்றும் கூறப்பட்டது.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி என்பது பணியாளர்கள் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது.

இதன் பொருட்டு மெக்னம் தனது பரிவுமிக்க நடவடிக்கைகள் மற்றும் மக்கள் மேம்பாட்டு திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் என்று லோரன்ஸ் லிம் மேலும் விவரித்தார்.

"எல்லோராலும் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது.

ஆனால், எல்லோராலும் ஏதோ ஒன்றை நிச்சயம் செய்ய முடியும் "என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு மெக்னம் எல்லோர் மனதிலும் நம்பிக்கையை விதைக்கும் என்றார் அவர்.

